


# 60-ஆம் ஆண்டு கம்பன் விழா போட்டிகள் - 2027

**தொடர்பு முகவரி** : செயலாளர், கம்பன் கழகம்,
எண்.72, 74, பெருமாள் கோயில் வீதி,
புதுச்சேரி - 605 001.
தொலைபேசி எண்கள்: 98947 55559, 97896 88104
மின்னஞ்சல்: kambanpdy@gmail.com

அன்புடையீர்! வணக்கம்,

புதுவைக் கம்பன் கழகத்தின் மரபுப்படி வருகின்ற **2027-ஆம் ஆண்டு மே திங்கள் 07, 08, 09 ஆகிய நாட்களில்** நடைபெறவிருக்கும் **60-வது ஆண்டு கம்பன் விழாவை** முன்னிட்டு வழக்கம்போல் இந்த ஆண்டும் பலவகைப் போட்டிகள் நடைபெறுகின்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசுகள், நற்சான்றிதழ்கள் 2027-ஆம் ஆண்டு கம்பன் விழாவின் முதல் நாள் அன்று மேடையில் வழங்கப்பெறும்.

கம்பன் கழகத்தால் நியமிக்கப்பெறும் நடுவர்கள் பரிசுக்குரியோரைத் தேர்ந்தெடுப்பர். அவர்கள் முடிவே இறுதியானது. கவிதை, கட்டுரை, ஓவியம் எழுதுவதற்குரிய தாள்களைக் கம்பன் கழகம் வழங்கும்.

போட்டிகளில் பரிசுபெற்ற அனைவருடைய பெயரும் கம்பன் விழா மலரில் இடம்பெறும். முதல் பரிசு பெற்ற கவிதையும், கட்டுரைகளும் மலரில் வெளியிடப்படும். பேச்சுப் போட்டிகளில் முதற்பரிசு பெற்றவர்களுக்குக் கம்பன் விழாவில் உரையாற்றும் வாய்ப்பும் உண்டு.

**மாணவர்களை ஊக்குவித்துப் போட்டிகளில் பங்கு பெற செய்து மூன்று பரிசுகளுக்கு மேல் பெறும் கல்விச்சாலைகளுக்குச் சிறப்புப் பரிசும் சான்றிதழும் வழங்கப்பெறும்.**

**புதுவை மாநிலத்தைச் சேர்ந்த பல்கலைக் கழகங்கள், அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் முதல்வர்கள், தலைமை ஆசிரியர்கள் தங்கள் நிறுவனங்களிலிருந்து ஒவ்வொரு போட்டிக்கும் முறையே இரண்டு மாணவர்களின் பெயர்களைத் தேர்வு செய்து 21-09-2026 (திங்கட்கிழமைக்குள்) மேற்கண்ட முகவரி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி உதவ வேண்டுகிறோம்.**

புதுவை மாநிலக் கல்வி நிலையங்களில் பயின்று வரும் மாணவர்களே போட்டிகளில் பங்கு பெறத் தகுதி உடையவர்கள். ஒருவர் ஓர் ஆண்டில் எந்தப் போட்டியில் முதல் பரிசு பெற்றாரோ, அவர் அடுத்த ஆண்டு அதே போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.

| இடம் | நேரம் |
|---|---|
| விவேகானந்தா மேனிலைப் பள்ளி,<br>செல்லபெருமாள்பேட், இலாசுப்பேட்டை, புதுச்சேரி - 8. | காலை 9.00 மணி |

| தேதி | நாள் | போட்டிகள் |
|---|---|---|
| 04.10.2026 | ஞாயிற்றுக்கிழமை | கவிதை இயற்றல், கட்டுரை, ஓவியம்,<br>இசை மற்றும் நாட்டியம். |
| 11.10.2026 | ஞாயிற்றுக்கிழமை | பேச்சுப்போட்டி, நீதிக்கதை,<br>மனப்பாடம் மற்றும் மாறுவேடம். |

புதுவை மாநில மாணவச் செல்வங்களின் கல்வியாற்றலை வளர்க்கக் கம்பன் கழகம் எடுக்கும் சீரிய முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகிறோம்.

புதுச்சேரி
02-09-2026

இவண்,
கம்பன் கழகம், புதுச்சேரி.

## 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் போட்டிகள்

1. **அமரர் திருமதி பட்டம்மாள் கோவிந்தசாமி நினைவுப் பரிசு:**

**கவிதை இயற்றும் போட்டி**

**ஒரே பரிசு ரூ.2,000/-**

கவிதை படைக்கும் விருப்பமுள்ள அனைவரும் கம்பனையோ கம்பராமாயணத்தையோ பொருளாகக் கொண்டு மரபு பிறழாமல் ஐந்து பாக்கள் படைக்க வேண்டும். பாவகை போட்டி தொடங்கும்போது தரப்படும்.(கல்லூரி மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை வயது வரம்பு இல்லை)

2. **அமரர் வை.வெங்கடசுப்பா ரெட்டியார் நினைவுப் பரிசு:**

**ஆய்வுக் கட்டுரைப் போட்டி**

முனைவர், இளமுனைவர் (Ph.d., M.Phil)

**ஒரே பரிசு ரூ.1,500/-**

தலைப்பு: **"கம்பனின் காப்பிய புனைத் திறன்"** - இத்தலைப்பின் வழி 10 பக்க அளவிலான ஆய்வுக் கட்டுரை நெறிப்படுத்தும் பேராசிரியர் சான்றுடன் 31-12-2026-க்குள் அளிக்கப் பெறல் வேண்டும்.

3. **அமரர் பி.சி. புருஷோத்தம ரெட்டியார் நினைவுப் பரிசு:**

**கட்டுரைப் போட்டி**

முதுநிலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு (M.A., M.Sc., M.com., M.D., M.E., M.L.,)

**பரிசுகள் ரூ.1000/- ரூ.750/-**

தலைப்பு: **"கம்பன் கவிதையின் மாண்பு"**

**எழுதவேண்டிய நேரம்:** காலை 9 மணி முதல் 12 மணி வரை
(நான்கு பக்கங்களுக்குக் குறையாமல் எழுதுதல் வேண்டும்)

4. **அமரர் அ.சி. கந்தசாமிப்பிள்ளை நினைவுப் பரிசு:**

**கட்டுரைப் போட்டி**

கல்லூரி இளநிலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு (B.A., B.Sc., B.Com., B.E., B.L., M.B.B.S)

**பரிசுகள் ரூ.1000/- ரூ.750/- ரூ.500/-**

தலைப்பு: **"கம்பனின் இயற்கை வர்ணனை"**

**எழுதவேண்டிய நேரம்:** காலை 9 மணி முதல் 12 மணி வரை
(நான்கு பக்கங்களுக்குக் குறையாமல் எழுதுதல் வேண்டும்)

5. **அமரர் வின்புரோஸ் சின்னிகிருஷ்ணன் நினைவுப் பரிசு:**

**கட்டுரைப் போட்டி**

மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு (+1, +2)

**பரிசுகள் ரூ.1000/- ரூ.750/- ரூ.500/-**

தலைப்பு: **"பரதனின் புலம்பல்"**

**எழுதவேண்டிய நேரம்:** காலை 9 மணி முதல் 11.30 மணி வரை
(நான்கு பக்கங்களுக்குக் குறையாமல் எழுதுதல் வேண்டும்)

6. **திருமிகு அமரர் வேல். சொக்கநாதன் அறக்கட்டளைப் பரிசு:**

## கட்டுரைப் போட்டி

(9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு)

**ஒரே பரிசு ரூ.1,000/-**

**தலைப்பு: "குகனின் அன்பு"**

**எழுதவேண்டிய நேரம்:** காலை 9 மணி முதல் 11.30 மணி வரை
(நான்கு பக்கங்களுக்கு குறையாமல் எழுதுதல் வேண்டும்)

7. **கோவை "லட்சுமி மில்ஸ்" பரிசு:**

## ஓவியப் போட்டி

(6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு)

**பரிசுகள் ரூ.1000/- ரூ.750/- ரூ.500/-**

**தலைப்பு: "அரியணை அனுமன் தாங்க" (யுத்த காண்டம் - திருமுடி சூட்டுப் படலம்)**

8. **அமரர் செல்வி கர்மேலா லெபோ நினைவுப் பரிசு:**

## இசைப் போட்டி

(9, 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு)

**பரிசுகள் ரூ.1,000/-, ரூ.750/- ரூ.500/-**

கம்ப இராமாயணத்தில் எவையேனும் ஐந்து பாடல்களுக்குப் பொருத்தமான இசையில் பாடுதல் வேண்டும்.

9. **அமரர் கலைமாமணி, புலவர் கோ.தனபாலன்-கஸ்தூரி அறக்கட்டளைப் பரிசு:**

## இசைப் போட்டி

(6, 7, 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு )

**பரிசுகள் ரூ.1,000/-, ரூ.750/- ரூ.500/-**

கம்ப இராமாயணத்தில் எவையேனும் மூன்று பாடல்களுக்குப் பொருத்தமான இசையில் பாடுதல் வேண்டும்.

10. **(அ) அமரர் செல்வசுந்தர் குமாரசாமி நினைவுப் பரிசு:**

**(ஆ) திருமதி பானுமதி முருகேசன் அறக்கட்டளைப் பரிசு:**

## நாட்டியப் போட்டி

(புதுவை மாநிலக் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு)

**முதற் பரிசு ரூ.1,500/-**

**இரண்டாம் பரிசு ரூ.1,250/-** **மூன்றாம் பரிசு ரூ.1,000/-**
**நான்காம் பரிசு ரூ.750/-** **ஐந்தாம் பரிசு ரூ.600/-**

**போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ரூ.500/- ஆறுதல் பரிசாக வழங்கப்பெறும்**

கம்ப இராமாயணப் பாடல்களில் பின்வரும் இரண்டு பாடல்களுக்குப் பரதக்கலை விதிமுறைப்படி ஆடுதல்.

1. **அயோத்தியா காண்டம் - கங்கைப் படலம் (பாடல் எண்.1926): "வெய்யோன் ஒளி..."** என்று தொடங்கும் பாடல்.

2. **பால காண்டம் - அகலிகைப் படலம் (பாடல் எண்.475): "இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்"** என்று தொடங்கும் பாடல்.

## 11.10.2026 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் போட்டிகள்

11. அமரர் நீதிபதி எஸ். மகராஜன் நினைவுப் பரிசு:

**பேச்சுப் போட்டி**

கல்லூரி இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு (B.A., B.Sc., B.Com., B.E., B.L., M.B.B.S)

**பரிசுகள் ரூ.1000/- ரூ.750/- ரூ.500/-**

தலைப்பு: **"அனுமனின் ஆற்றல்"** (10 மணித்துளிகள்)

12. டாப் எசன்ஸ் நிறுவனப் பரிசு:

**பேச்சுப் போட்டி**

(11, 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு)

**பரிசுகள் ரூ.1000/- ரூ.750/- ரூ.500/-**

தலைப்பு: **"இரணியன் கதை உணர்த்துவது"** (10 மணித்துளிகள்)

13. அமரர் ந. இராசுப்பிள்ளை நிறுவனப் பரிசு:

**பேச்சுப் போட்டி**

(9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு)

**பரிசுகள் ரூ.1000/- ரூ.750/- ரூ.500/-**

தலைப்பு: **"இருவரங்கள் தந்து எய்தினான் புகழுடம்பு"** (5 மணித்துளிகள்)

14. மாணவர்களின் நினைவாற்றலை வளர்க்க விரும்பும் ஓர் அன்பரின் பரிசு:

**மனப்பாடப் போட்டி**

அ. மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு (+1, +2):

**முதல் பரிசு ரூ.2,000/-, இரண்டாம் பரிசு ரூ.1,500/-, மூன்றாம் பரிசு ரூ.1,000/-**

ஆரண்ய காண்டம் - அகத்தியப் படலம் : "ஐந்தும் ஐந்தும்..." - எனத் தொடங்கும் பாடல் முதல் 20 பாடல்கள் வரை.

ஆ. 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு:

**முதல் பரிசு ரூ.2,000/-, இரண்டாம் பரிசு ரூ.1,500/-, மூன்றாம் பரிசு ரூ.1,000/-**

ஆரண்ய காண்டம் - அகத்தியப் படலம் : "ஐந்தும் ஐந்தும்..." - எனத் தொடங்கும் பாடல் முதல் 15 பாடல்கள் வரை.

இ. 6, 7, 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு:

**முதல் பரிசு ரூ.2,000/-, இரண்டாம் பரிசு ரூ.1,500/-, மூன்றாம் பரிசு ரூ.1,000/-**

ஆரண்ய காண்டம் - அகத்தியப் படலம் : "ஐந்தும் ஐந்தும்..." - எனத் தொடங்கும் பாடல் முதல் 10 பாடல்கள் வரை.

15. அமரர் அ.பா. இராமலிங்கனார் நினைவுப் பரிசு:

**நீதிக் கதைப் போட்டி**

(முதல் 5 வகுப்புகளில் பயிலும் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு)

**பரிசுகள் ரூ.1000/-, ரூ.750/- ரூ.500/-வீதம் 2 பரிசுகள்**

கம்ப இராமாயணத்தில் நீதியோடு கூடிய கிளைக் கதையொன்றை ஐந்து மணித் துளிகளில் சொல்லுதல்.

16. திருமதி இரிச்சம்மாள் முனிசாமி அறக்கட்டளைப் பரிசு:

**கம்பன் பாத்திரங்களாக மாறுவேடப் போட்டி**

(8 முதல் 15 வயதிற்குட்பட்ட மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ளுதல் வேண்டும்)

**பரிசுகள் ரூ.2,000/-, ரூ.1,500/- ரூ.1,200/- ரூ.1,000/- ரூ.750/-**

## ஆனந்தரங்கப் பிள்ளை, அரசு சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள்

17. அமரர் கம்பவள்ளல் ஆர். சக்கரபாணி செட்டியார் அறக்கட்டளைப் பரிசு:

### கட்டுரைப் போட்டி

அ. தலைப்பு: "அனுமனின் சிறப்பு"

முதுநிலை : பரிசுகள் ரூ.1000/- ரூ.500/-

ஆ. தலைப்பு: "இலக்குவனின் சேவை"

இளநிலை : பரிசுகள் ரூ.800/- ரூ.600/-

18. ஓவியப் போட்டி:

அ. தலைப்பு : "குகன் கங்கையைக் கடக்க இராமனுக்கு உதவும் காட்சி"

முதுநிலை : பரிசுகள் ரூ.1000/- ரூ.500/-

ஆ. தலைப்பு : "அசோக வனத்தில் சீதை"

இளநிலை : பரிசுகள் ரூ.800/- ரூ.600/-

19. அமரர் திருமதி. சூரிய விசயகுமாரி-துரை மாலிறையன் அறக்கட்டளைப் பரிசு:

### கதை சொல்லும் போட்டி

பரிசுகள் ரூ.1000/-, ரூ.500/-

கம்ப இராமாயணத்தில் நீதியோடு கூடிய கிளைக் கதையொன்றை ஐந்து மணித் துளிகளில் சொல்லுதல்.

20. ஜே.வி.எஸ் நிறுவன அறக்கட்ளைப் பரிசுகள்:

### மனப்பாடப் போட்டி

பங்குபெறும் மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ.1,000/- வீதம் பரிசளிக்கப்படும்

கம்ப இராமாயணத்தில் ஏதேனும் 15 பாடல்கள்

## பொதுத்தேர்வில் முதலிடம் பெறும் மாணவ-மாணவிகளுக்கு அளிக்கப்படும் அறக்கட்டளைப் பரிசுகள்

21. அமரர் வே.பொன்னம்பலம் அறக்கட்டளைப் பரிசு:

**பத்தாம் வகுப்பு** பொதுத்தேர்வில் தமிழில் புதுவை மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **பரிசு ரூ.2,500/-**

22. கம்பவாணர் அமரர் அ.அருணகிரி நூற்றாண்டு நினைவுப் பரிசு:

அ) 10-ம் வகுப்பு (சி.பி.எஸ்.இ) பொதுத்தேர்வில் தமிழில் புதுவை மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **முதல் பரிசு ரூ.3,000/-**

**ஆ)** 10-ம் வகுப்பு (சி.பி.எஸ்.இ) பொதுத்தேர்வில் தமிழில் புதுவை மாநில அளவில் இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **பரிசு ரூ.2,000/-**

**இ)** 12-ம் வகுப்பு (சி.பி.எஸ்.இ) பொதுத்தேர்வில் தமிழில் புதுவை மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **முதல் பரிசு ரூ.3,000/-**

**ஈ)** 12-ம் வகுப்பு (சி.பி.எஸ்.இ) பொதுத்தேர்வில் தமிழில் புதுவை மாநில அளவில் இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **பரிசு ரூ.2,000/-**

**23. திருமதி ஹாஜா ஹலிமா அறக்கட்டளைப் பரிசுகள்:**

அ. **மேனிலை (12-ஆம் வகுப்பு)** பொதுத்தேர்வில் தமிழில் புதுவை மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **பரிசு ரூ.2,500/-**

ஆ. புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தில் பொதுத்தேர்வில் **இளநிலை பட்டப்படிப்பில்** புதுவை மாநில அளவில் தமிழில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **பரிசு ரூ.5,000/-**

இ. புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தில் பொதுத்தேர்வில் **முதுநிலை பட்டப்படிப்பில்** புதுவை மாநில அளவில் தமிழில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **பரிசு ரூ.7,500/-**

ஈ. புதுச்சேரி **ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் (D.T.Ed.,)** தேர்வில் மாநில அளவில் தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **பரிசு ரூ.2,000/-**

உ. புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தில் **இளங்கலை ஆசிரியர் பட்டப்படிப்பு (B.Ed.,)** தேர்வில் மாநில அளவில் தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறும் **பரிசு ரூ.3,000/-**

**24. புதுவை மாநிலத் தமிழ்ப் புலவர்கள் மூவர் மற்றும் தமிழ் அறிஞர் ஒருவருக்குச் சிறப்பளித்தல்:**

**கம்பன் கழகம் நியமிக்கும் ஐவரைக் கொண்ட நடுவர் குழு எழுத்துப் பணி, புலமை, பண்புடைமை, சமுதாய மதிப்பு முதலியவற்றின் அடிப்படையில் நால்வரையும் பரிந்துரைக்கும்.**

அ. திருமிகு. ஜீ.எஸ்.ராமமூர்த்தி-மதனம் அம்மாள் அறக்கட்டளைப் பரிசு: ரூ.1,000/-

ஆ. திருமதி. ஜெயா-கலியாணசுந்தரம் அறக்கட்டளைப் பரிசு: ரூ.1,000/-

இ. திருமிகு. சிவகாமி-கிருஷ்ணசாமி அறக்கட்டளைப் பரிசு: ரூ.1,000/-
(பெண்பாற் புலவர்)

ஈ. திருமிகு. சிவகாமி-கிருஷ்ணசாமி அறக்கட்டளைப் பரிசு: ரூ.1,000/-
(புதுவை மாநிலத்தில் சிறந்த தமிழ்த் தொண்டாற்றிடும் தமிழ் அறிஞர் ஒருவருக்குச் சிறப்பளித்தல்)

**25. திருமதி லலிதா பாலகிருஷ்ணன் அறக்கட்டளைப் பரிசு:**

**கம்பன் விழா மதிப்பீடு - ரூ.1,000/-**

புதுவைக் கம்பன் விழாவின் மூன்று நாட்கள் நிகழ்ச்சி பற்றி மதிப்பீடு செய்து. விழா முடிந்த 20 நாட்களுக்குள் விழாவைப் பற்றிய மதிப்பீட்டினை எழுதி கழகச் செயலருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். சிறந்த மதிப்பீட்டாளருக்கு இப்பரிசு வழங்கப்பெறும். மதிப்பீடு ஆறு பக்க அளவிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.